# திருநெல்வேலி மாநகராட்சி

## 11.04.2022 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்ட

## பொருட்கள் மற்றும் தீர்மானங்கள் விவரம்

---

## பொருட்கள்

1) இம்மாநகராட்சியில் தற்போது நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலின்படி வணக்கத்திற்குரிய மாமன்றத் தலைவர் அவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில், மாமன்றத் தலைவர் அவர்களால் அன்றாட அலுவலகப் பணிகளை மேற்கொள்வதற்கும் பொதுமக்களின் அத்தியாவசியமான பணிகளை மேற்கொள்ளும் பொருட்டும் TOYOTA Crysta – GX (7) Super white வாகனம் ஒன்றினை மாநகராட்சி பொதுநிதியின் கீழ் புதிதாக கொள்முதல் செய்வதற்கும், மேற்படி பொருள் தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்றுக் கொள்ளவும், மற்றும் மேற்படி புதிய வாகனத்தை அங்கீகரிக்கப்பட்ட வாகன விற்பனையாளர் மெசர்ஸ்.அண்ணாமலைஸ் ஏஜென்சிஸ், மதுரை (பி) லிமிடெட், திருநெல்வேலி நிறுவனத்தின் உத்தேச விலைப்புள்ளி தொகையான ரூ.24,41,994/- என்ற விலை விகிதத்தில் கொள்முதல் செய்வதற்கும் மாமன்ற அனுமதி பெறவும் மற்றும் அவசர அவசியம் கருதி மேற்குறிப்பிட்ட வாகனத்தினை மெசர்ஸ்.அண்ணாமலைஸ் ஏஜென்சிஸ், மதுரை (பி) லிமிடெட், திருநெல்வேலி நிறுவனத்திடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டமைக்கு மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் கண்ட விபரப்படி, தற்போது நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலின்படி வணக்கத்திற்குரிய மாமன்றத் தலைவர் அவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில், மாமன்றத் தலைவர் அவர்களால் அன்றாட அலுவலகப் பணிகளை மேற்கொள்வதற்கும் பொதுமக்களின் அத்தியாவசியமான பணிகளை மேற்கொள்ளும் பொருட்டும் TOYOTA Crysta – GX (7) Super white வாகனம் ஒன்றினை மாநகராட்சி பொதுநிதியின் கீழ் புதிதாக கொள்முதல் செய்வதற்கும், மேற்படி பொருள் தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்றுக் கொள்ளவும், மற்றும் மேற்படி புதிய வாகனத்தை அங்கீகரிக்கப்பட்ட வாகன விற்பனையாளர் மெசர்ஸ்.அண்ணாமலைஸ் ஏஜென்சிஸ், மதுரை (பி) லிமிடெட், திருநெல்வேலி நிறுவனத்தின் உத்தேச விலைப்புள்ளி தொகையான ரூ.24,41,994/- என்ற விலை விகிதத்தில் கொள்முதல் செய்தமைக்கும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

(ந.க.எண்.இ2.931/2022)

**தீர்மானம் எண்: 1 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**

---

2) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகரதிட்டத்தின் கீழ் பாளை ஹைகிரண்டு சாலையில் அறிவு சார் மையம் (Knowledge Centre) அமைக்கும் பணியினை ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு, சீர்மிகு நகர இயக்குநர்கள் குழுக் கூட்ட சுற்றறிக்கை குறிப்பு 03/2021ல் (Circulation Note 3/2021) தீர்மானிக்கப்பட்டதின் அடிப்படையிலும், சீர்மிகு நகரத் திட்ட மேலாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.E1/4399/2021 நாள்:19.01.2022ல் ரூ.2.00 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் படியும் மற்றும் தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.001/2022/DO1 நாள்

24.01.2022ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின் படியும் மேற்படி திட்டப்பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளிஅறிவிப்பு எண்07/2021-22/SCM-ன்படி அகில இந்தியஅளவில் The Times of India ஆங்கில நாளிதழிலும், மாநிலஅளவில் தினகரன் தமிழ் நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 26.01.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 16.02.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மின்னணு முறையில்லாத இரு உறைமுறையில் (1)மெசர்ஸ்.Smart Infratech Developers, Erode மற்றும் (2) M/s. Vivek Vijay & Company, Erode ஆகிய இரண்டு நிறுவனங்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் 25.02.2022-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் (Technical Bid) திறக்கப்பட்டு மேற்படி நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில், M/s. Smart Infratech Developers, Erode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியானது தொழில்நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதால் அன்னாரது விலைப்புள்ளி அட்டவணைகள் (Price Bid) 26.02.2022-ல் திறக்கப்பட்டு மேற்படி திட்டப்பணிக்கான ஒப்புநோக்குபட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன்விபரம் வருமாறு:-

| வ. எண | பணியின் பெயர் | துறையின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | M/s.Smart Infratech Developers, Erode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிமதிப்பு |
|---|---|---|---|
| 1 | சீர்மிகுநகரதிட்டத்தின் கீழ், பாளையங்கோட்டை மண்டலம் ஹைகிரண்டு சாலையில் அறிவு சார் மையம் (Knowledge Centre) அமைக்கும் பணி | ரூ.1,70,89,422/- | ரூ.1,81,31,582/- |
| | | | 6.10% மதிப்பீட்டைவிட அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மேற்கண்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ்.Smart Infratech Developers, Erode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1,81,31,582/-ஆனது மதிப்பீட்டைவிட 6.10% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை விலை குறைப்பு பேச்சுவார்த்தைக்கு அழைக்க 26.02.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 07.03.2022-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலக விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று மேற்படி நிறுவனம் தற்போது மேற்படி பணிக்கு தேவையான கட்டுமானப் பொருட்கள், குறிப்பாக எரிபொருள் மற்றும் வேலை ஆட்களுக்கான கூலி ஆகியவை சந்தையில் எதிர்பாராதவிதமாக அதிகமாகிவிட்டபடியால் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 6.10% அதிகமான விலை விகிதத்திலிருந்து (ஒப்பந்த மதிப்பு ரூ.1,81,31,582/-) குறைத்து மதிப்பீட்டை விட 4.86% அதிகமான விலைவிகிதத்தில் (ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.1,79,19,670/-மேற்படி பணியை மேற்கொள்வதற்கு சம்மதம் தெரிவித்தும், இதற்கு மேல் விலைக்குறைப்பு செய்ய இயலாது எனவும் தனது கடிதத்தில் இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:-

| வ. எண | பணியின் பெயர் | துறையின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | M/s.Smart Infratech Developers, Erode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு பின்வரும் M/s.Smart Infratech Developers, Erode நிறுவனத்தின் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
| 1 | சீர்மிகுநகர திட்டத்தின் கீழ், பாளையங் கோட்டை மண்டலம் ஹைகிரண்டு சாலையில் அறிவு சார்மையம் (Knowledge Centre) அமைத்தல். | ரூ.1,70,89,422/- | ரூ.1,81,31,582/- | ரூ.1,79,19,670/- |
| | | | 6.10% மதிப்பீட்டைவிட அதிகம் | 4.86% மதிப்பீட்டைவிட அதிகம் |

எனவே, மேற்படி அட்டவணையில் கண்டுள்ளவாறு 07.03.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில், மேற்படி பணியானது சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், உரிய காலகெடுவிற்குள் திட்டப்பணியினை முடிக்க வேண்டியிருப்பதாலும், M/s.Smart Infratech Developers, Erode நிறுவனத்தின் முதலாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு தொகை ரூ.1,79,19,670/-ஆனது மதிப்பீட்டைவிட 4.86% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொள்வது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளது. மேற்படி பரிந்துரையின் பேரிலும், மேற்படி பணியானது சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுவதால் குறிப்பிட்ட காலகெடுவிற்குள் திட்டப்பணியினை முடிக்க வேண்டியதின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டை விட 4.86% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.Smart Infratech Developers, Erode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்வதற்கும், முன் அனுமதி பெற்று வேலை ஆணை வழங்குவதற்கும் மாமன்ற அனுமதிக்கு

**அலுவலகக் குறிப்பு:**

திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகுநகரதிட்டத்தின் கீழ், பாளை ஹைகிரண்டு சாலையில் அறிவு சார் மையம் அமைக்கும் பணியானது அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருப்பதாலும், கல்வி பயிலும் மாணவர்களின் அறிவுத் திறனை மேம்படுத்தும் பொருட்டு மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு-1,அத்தியாயம் 2,உட்பிரிவு 2.7.2-ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டைவிட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 07.03.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Smart Infratech Developers, Erode நிறுவனத்தின் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு தொகை ரூ.1,79,19,670/-ஆனது மதிப்பீட்டைவிட 4.86% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படியும் மேற்படி பணியானது சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுவதால் குறிப்பிட்ட காலகெடுவிற்குள் திட்டப்பணியினை முடிக்க வேண்டியதின் அவசர அவசியம் கருதி மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்வதற்கும், முன் அனுமதி பெற்று வேலை ஆணை வழங்குவதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ஒ.பு.அ.எண். 7/திலிசீர்மிகுநகரநிறுவனம்2021-22/SCM)

**தீர்மானம் எண்: 2 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**

---

3) திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டல அலுவலகத்தில் அயற்பணி அடிப்படையில் 24.2.2015 முதல் 12.12.2017 முடிய உதவி ஆணையாளராகப் பணிபுரிந்து வந்த திரு.என்.வசந்தராஜன் துணை ஆட்சியருக்கு விடுப்பூதிய பங்குத்தொகை மற்றும் ஒய்வூதியப் பங்குத்தொகை கீழ்கண்டவாறு செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ள மாநில கணக்காயர். சென்னை - 18 அவர்களின் கடிதம் எண் AG(A&E)PC-II/Unit- I/ 2021 /CR No. 160967 / Vol. No. 1319 dated 30.10.2021 மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது

1. விடுப்பூதிய பங்குத் தொகை - ரூபாய் 157733/-
2. ஒய்வூதிய பங்குத் தொகை - ரூபாய் 763365/-

--------------

மொத்தம் 921098/-

-------------

அலுவலகக் குறிப்பு:

திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டல அலுவலகத்தில் அயற்பணி அடிப்படையில் 24.2.2015 முதல் 12.12.2017 முடிய உதவி ஆணையாளராகப் பணிபுரிந்த திரு.என்.வசந்தராஜன் துணை ஆட்சியருக்கு மாநில கணக்காயர் அவர்களது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி 24.2.2015 முதல் 12.12.2017 முடிய உள்ள காலங்களுக்கு விடுப்பூதிய பங்குத் தொகை ரூபாய் 157733/- மற்றும் ஒய்வூதியப் பங்குத் தொகை ரூபாய் 763365/- ஆக மொத்தம் ரூ 921098/- மட்டும் மாநில கணக்காயர் அவர்களுக்கு செலுத்த மாமன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்: சி1 /10069/ 2013)

**தீர்மானம் எண்: 3 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**

---

4) இம்மாநகராட்சி நான்கு மண்டல அலுவலகங்கள், சந்திப்பு பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மை பணிகளை சுய உதவிக் குழுக்கள் மூலம் 645 நபர்கள் மாமன்ற தீர்மானம் எண். 112 நாள்: 29.10.2018ன்படி அனுமதி வழங்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் மாமன்ற தீர்மான எண் 145 நாள் 10.01.2022ன்படி மேற்படி பணியாளர்களின் பணிக்காலம் 15.3.2022 தேதியுடன் முடிவடைந்துள்ளது. மேற்படி பணியாளர்களின் பணியின் அவசியத்தை முன்னிட்டு கீழ்க்கண்டுள்ள விபரப்படி 40 சுய உதவிகுழுக்கள் மூலம் பணிபுரிந்து வரும் 645 நபர்களை 18.3.2022 முதல் 13.06.2022 வரை மேலும் 88 நாட்களுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிபுரிய அனுமதிக்கவும், அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | சுய உதவிக் குழுவின் பெயர் | உறுப்பினர் களின் எண்ணிக்கை | பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வார்டு அலுவலகம் மற்றும் வார்டு/ |
|---|---|---|---|
| 1 | அக்னி சிறகுகள் சுகாதாரப் பணிக்குழு | 26 | திருநெல்வேலி வார்டு |
| 2 | அக்னி பறவைகள் சுகாதாரப் பணிக்குழு | 23 | திருநெல்வேலி வார்டு |

| | | | |
|---|---|---|---|
| 3 | தாமிரபரணி சுகாதாரப் பணிக்குழு | 20 | திருநெல்வேலி வார்டு |
| 4 | அருந்ததியர் சுகாதாரக் குழு | 25 | திருநெல்வேலி வார்டு |
| 5 | சாரா சுகாதார சுய உதவிக் குழு | 26 | திருநெல்வேலி வார்டு |
| 6 | வெண்ணிலா சுகாதாரப் பணிக்குழு | 23 | தச்சநல்லூர் மண்டலம் |
| 7 | பசுமை சுகாதாரப் பணிகுழு | 12 | தச்சநல்லூர் மண்டலம் |
| 8 | ஸ்ரீஜெயம் சுகாதார பணிக்குழு | 15 | தச்சநல்லூர் மண்டலம் |
| 9 | காந்திஜி சுகாதரப் பணிக்குழு | 11 | தச்சநல்லூர் மண்டலம் |
| 10 | ஸ்ரீ போராட்சிஅம்மன் ஆண்கள் குழு | 20 | தச்சநல்லூர் மண்டலம் |
| 11 | ஸ்ரீ உலகம்மன் சுகாதாரப் பணிக்குழு | 10 | தச்சநல்லூர் மண்டலம் |
| 12 | ஸ்ரீ முத்தாரம்மன் ஆண்கள் பணிக்குழு | 19 | தச்சநல்லூர் மண்டலம் |
| 13 | வடக்கத்தி மாரியம்மன் சுகாதாரக் குழு | 20 | தச்சநல்லூர் மண்டலம் |
| 14 | APJ. அப்துல் கலாம் ஆண்கள் குழு | 10 | தச்சநல்லூர் மண்டலம் |
| 15 | TMC 40 சுகாதார சிறப்பு பணிக்குழு | 12 | ராமையன்பட்டி உரகிடங்கு தச்சநல்லூர் மண்டலம் |
| 16 | ஸ்ரீசெல்வ விநாயகர் சுகாதாரப்பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 17 | ஸ்ரீ காளியம்மன் சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 18 | தந்தை பெரியார் சுகாதாரப் பணிக்குழு | 13 | பாளை மண்டலம் |
| 19 | ஆதி சக்தி சுகாதாரப் பணிக்குழு | 13 | பாளை மண்டலம் |
| 20 | அன்னை இந்திரா மகளிர் சுயஉதவிக் குழு | 18 | பாளை மண்டலம் |
| 21 | டாக்டர் அம்பேத்கார் ஆண்கள் குழு | 23 | பாளை மண்டலம் |
| 22 | தளபதி ஒணடிவீரன் சுயஉதவிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 23 | மகாராஜா ஆண்கள் சுயஉதவிக்குழு | 15 | பாளை மண்டலம் |
| 24 | ஓம்சக்தி சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 25 | முத்தாரம்மன் சுயஉதவிக்குழு | 10 | பாளை மண்டலம் |
| 26 | ஸ்ரீ அன்னை தெரசா சுயஉதவிக்குழு | 14 | பாளை மண்டலம் |
| 27 | நேருஜி ஆண்கள் சுகாதாரக் குழு | 14 | மேலப்பாளையம் மண்டலம் |
| 28 | மங்களஈஸ்வரி பெண்கள் சுயஉதவிக்குழு | 21 | மேலப்பாளையம் மண்டலம் |
| 29 | பாரதி ஆண்கள் சுய உதவிக்குழு | 19 | மேலப்பாளையம் மண்டலம் |
| 30 | செங்கை வாஞ்சிநாதன் சுகாதாரக் குழு | 18 | மேலப்பாளையம் மண்டலம் |
| 31 | மங்கள விநாயகர் ஆண்கள் சுய | 16 | மேலப்பாளையம் மண்டலம் |

| | | | |
|---|---|---|---|
| | உதவிக்குழு | | |
| 32 | செந்தமிழ் மகளீர் சுய உதவிக்குழு | 10 | மேலப்பாளையம் மண்டலம் |
| 33 | சுபாஷ் சந்திரபோஸ் சுகாதாரப்பணிக்குழு | 12 | மேலப்பாளையம் மண்டலம் |
| 34 | நேதாஜி சுய உதவிக்குழு | 14 | மேலப்பாளையம் மண்டலம் |
| 35 | செம்மொழி சுய உதவிக்குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 36 | அன்னை சத்தியா சுயஉதவிக்குழு | 15 | மேலப்பாளையம் மண்டலம் |
| 37 | அன்னை சந்தியா சுயஉதவிக்குழு | 12 | மேலப்பாளையம் மண்டலம் |
| 38 | திருப்பதி சுகாதாரக்குழு | 18 | மேலப்பாளையம் மண்டலம் |
| 39 | காளியம்மன் ஆண்கள் சுகாதாரப்பணிக்குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 40 | தந்தை பெரியார் ஆண்கள் பணிக்குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |
| | மொத்தம் | 645 | |

ஆ) மேலும் திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டல பகுதிகளில் 8 குடியிருப்போர் நலச்சங்கமும், பாளையங்கோட்டை மண்டல பகுதியில் 10 குடியிருப்போர் நலச்சங்கமும் மேலப்பாளையம் மண்டல பகுதியில் 14 குடியிருப்போர் நல சங்கங்களிலும் 10 ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில் நலச்சங்கங்களின் மேற்பார்வையாளரின் கீழ் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்படி நலச்சங்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் 1.1.2018 முதல் ரத்து செய்யப் பட்டு மாநகராட்சி மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மாநகராட்சியில் பணியாற்றும் நிரந்தர துப்புரவு பணியாளர்களின் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு மண்டல சுகாதார அலுவலர்களால் தெரிவிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களின் தேவைப்பட்டியலின்படி சுய உதவிக்குழு துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள ஏதுவாக தச்சநல்லூர் மண்டலத்திற்கு 19 நபர்கள் கொண்ட ஒரு சுய உதவிக்குழுவும், பாளையங்கோட்டை மண்டலத்திற்கு 15 நபர்கள் கொண்ட இரண்டு சுய உதவிக் குழுவும் மேலப்பாளையம் மண்டலத்திற்கு 16 நபர்கள் மற்றும் 17 நபர்கள் கொண்ட இரண்டு சுயஉதவிக்குழுவும் ஏற்படுத்தி மேற்படி பணியாளர்கள் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணி 01.01.2018 முதல் 88 நாட்களுக்கு மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்ற தீர்மான எண். 13 நாள்: 28.03.2018-ல் அனுமதி பெறப்பட்டு அதன்படி மேற்படி சுய உதவிக்குழுக்களின் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

மேற்படி பணியாளர்கள் பணிக்காலம் மாமன்ற தீர்மானம் எண். 145, நாள்: 10.01.2022ன் பிரகாரம் 08.03.2022 உடன் முடிவடைந்ததால் மேலும் 11.03.2022 முதல் 06.06.2022 வரை 88 நாட்களுக்கு மேற்படி பணியாளர்களை பணியில் ஈடுபடுத்துவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந. க. எண். M3/1549/2021 நாள்: 15.6.2021ன்படி நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.411/- என்பதன் அடிப்படையில் ஊதியம் வழங்கவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ள நகராட்சி திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000 ஐ பின்பற்றி குப்பையினை வீடுவீடாகச் சென்று மக்கும் மற்றும் மக்காத குப்பையாகப் பிரித்து வாங்க வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும். இம்மாநகராட்சியிலுள்ள குறைந்த எண்ணிக்கையிலான துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு மாநகரப் பகுதி முழுவதிலும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. இந்நிலையில் இக்குழுக்களைச் சேர்ந்த நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.411/- என்ற அடிப்படையில் தொகை வழங்குவதால் மாநகராட்சிக்கு ஏற்படும் செலவினம் வெகுவாக குறைகின்றது. மேலும் அரசாணை எண். 69, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.நி3) துறை,

நாள்: 4.5.98ன் மூலம் தமிழ்நாட்டில் நகராட்சி சேவைப் பணிகளை தனியார் மயமாக்குதல் குறித்து வெளியிடப்பட்டுள்ள கொள்கைக் குறிப்பில், தனியார்மயமாக்கப்பட வேண்டிய சேவைப்பணிகளுள் திடக்கழிவு மேலாண்மையும் ஒன்று எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நிரந்தர துப்புரவு பணியாளர்கள் பணியமர்த்தினால் செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ.1,47,00,000 ஆகும். சுய உதவிக் குழுக்களை பணியில் ஈடுபடுத்தினால் செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ.91,73,520/- ஆகும். மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் மேற்கண்ட 45 சுய உதவிக் குழுக்களை நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.411/- என மாவட்ட ஆட்சித் தலைவரின் செ.மு. ஆணை ந.க.எண். M 3/1549/2021 நாள்: 15.6.2021ன்படி தின ஊதியம் அடிப்படையில் மாமன்ற தீர்மான எண். 145 நாள்: 10.01.2022 ன்படி முறையே அனுமதி காலம் 18.12.2021 முதல் 15.03.2022 வரை மற்றும் 11.12.2021 முதல் 08.03.2022 உடன் முடிவடைந்த நிலையில் அ)வில் குறிப்பிட்டுள்ள 645 சுய உதவிக் குழு துாய்மை பணியாளர்களுக்கு 18.03.2022 முதல் 13.06.2022 வரை 88 நாட்களுக்கும் ஆ)வில் குறிப்பிட்டுள்ள 99 சுய உதவிக் குழு துாய்மை பணியாளர்களுக்கு 11.03.2022 முதல் 06.06.2022 வரை 88 நாட்களுக்கும் மேற்படி சுயஉதவிக்குழு பணியாளர்களை திடக்கழிவு மேலாண்மைப் பணியில் ஈடுபடுத்தவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். M3/1549/2021 நாள்: 15.6.2021ன் படி துாய்மை பணியாளர்களின் ஊதியம் ரூ. 411/- என வழங்கவும் அதற்காகும் மொத்த செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். மேலும் அவசரம் அவசியம் கருதி மாண்புமிகு மாமன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

(H2/7560/2017)

**தீர்மானம் எண்: 4 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**

---

5) திருநெல்வேலி மாநகராட்சி திருநெல்வேலி மண்டல அலுவலகத்திற்குட்பட்ட ஐந்து உரிம இனங்களுக்கு அரசாணை எண் 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 25-05-2009- ன்படி நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தை ஒப்படைக்கும் நாள் முதல் 31-03-2025 வரையிலான காலத்திற்கு அனுபவிக்கும் வகைக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 29-03-2022 அன்று நிர்ணயிக்கப்பட்டது. செய்தி மக்கள் தொடர்பு அலவலகம் திருநெல்வேலி மூலமாக 15-03-2022 அன்று தினமலர் மற்றும் தின மணி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது. 29-03-2022 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விபரம் கீழ்கண்ட விபரப்படி உள்ளது.

இனம் எண்: 1

1) திருநெல்வேலி டவுண் ஆஸாத் சாலையில் உள்ள மீன் சந்தை முன்பு ஞாயிற்றுக் கிழமை தோறும் கோழி விற்பனை செய்பவர்களிடம் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமம். (நிர்ணயம் செய்யப்பட்ட குறுமத்தொகை ரூ. 38,300 /-

ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விபரம்

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | வைப்புத் தொகை செலுத்திய விபரம் | சால்வன்சிக்கு பதிலாக கூடுதல் வைப்புத் தொகை செலுத்திய விபரம் | ஏலக் கேள்வி தொகை |
|---|---|---|---|---|
| **1.** | திரு. ஆர். செய்யது அலி த/பெ. T. ராஜா | Rs. 5000 /- T.M.B | Rs. 5000 /- T.M.B | ரூ.1,00,100/- |

| | | | | |
|---|---|---|---|---|
| | 9G- ராஜீவ் காந்தி நகர் திருநெல்வேலி டவுண் | D.D.No. 157807 Dated: 28-03-2022 | D.D.No. 157808 Dated: 28-03-2022 | |
| **2.** | திரு. ஆ. லெட்சுமி காந்தன் 1/14B, I.O.B காலனி காந்தி நகர், திருநெல்வேலி டவுண். | Rs. 5000 /- K.V.B D.D.No. 577515 Dated: 25-03-2022 | Rs. 5000 /- K.V.B D.D.No. 577514 Dated: 25-03-2022 | ரூ.1.00,000/- |

ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விபரம்

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | வைப்புத் தொகை செலுத்திய விபரம் | சால்வன்சிக்கு பதிலாக கூடுதல் வைப்புத்தொகை செலுத்திய விபரம் | ஏலக் கேள்வி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | திரு. V.மாரியப்பன் த/பெ. வேல்சாமி 103- முனீஸ்வரன் கோவில் தெரு, கலாம் நகர், கண்டியபேரி-1 | Rs. 5000 /- Canara Bank D.D.No. 732002 Dated: 25-03-2022 | Rs. 5000 /- Canara Bank D.D.No. 732003 Dated: 25-03-2022 | ரூ. 55,800 /- |
| 2. | திரு. M.லெட்சுமி காந்தன் 1/14B, I.O.B காலனி காந்தி நகர், திருநெல்வேலி டவுண். | Rs. 5000 /- K.V.B D.D.No. 577517 Dated: 25-03-2022 | Rs. 5000 /- K.V.B D.D.No. 577516 Dated: 25-03-2022 | ஒப்பந்தப்புள்ளி தொகை குறிப்பிடப்பட வில்லை. |

மேற்படி திருநெல்வேலி டவுண் ஆஸாத் சாலையில் உள்ள மீன் சந்தை முன்பு ஞாயிற்றுக் கிழமை தோறும் கோழி விற்பனை செய்பவர்களிடம் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட குறுமத்தொகை ரூ.38,300/-ஆகும். பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளில் வரப்பெற்ற கேள்விகளில் திரு. ஆர். செய்யது அலி என்பவரின் ரூ.1,00,100/- ற்கான ஏலக் கேள்வி உச்ச கேள்வியாக உள்ளது இந்த உச்ச கேள்வியானது குறும தொகையினை விட 61,800/- கூடுதலாகவும், கடந்த ஆண்டு ஏலத் தொகையினை விட ரூ.63,717/- கூடுதலாகவும் (36,383 - 1,00,100 ) திரு. M.லெட்சுமி காந்தன் என்பவரின் ஏலத் தொகையை விட ரூ.100/- கூடுதலாகவும் , திரு. V. மாரியப்பன் என்பவரின் ஒப்பந்தத் தொகையை விட ரூ.44,300 /- கூடுதலாகவும் உள்ளது. எனவே உச்ச ஏலக் கேள்வீ தொகை ரூ.1,00,100/- ஏற்று திரு. ஆர். செய்யது அலி என்பவருக்கு திருநெல்வேலி டவுண் ஆஸாத் சாலையில் உள்ள மீன் சந்தையின் முன்பு ஞாயிற்றுக் கிழமை தோறும் கோழி விற்பனை

செய்பவர்களிடம் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தை ஒப்படைக்கும் நாள் முதல் 31-03-2025 வரையிலான காலத்திற்கு அனுபவிக்கும் உரிமத்தினை வழங்க மாமன்றத்தின் பார்வைக்கும் , முடிவிற்கும்.

இனம் எண் : 2

திருநெல்வேலி அலுவலகத்திற்குட்பட்ட டவுண் மீன் சந்தையில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (நிர்ணயம் செய்யப்பட்ட குறும தொகை ரூ. 2,63,000 /-) ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விபரம்

| வ. எ ண் | பெயர் மற்றும் முகவரி | வைப்புத் தொகை செலுத்திய விபரம் | சால்வன்சிக்கு பதிலாக செலுத்திய கூடுதல் வைப்புத்தொகை செலுத்திய விபரம் | ஏல கேள்வி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| **1.** | திரு. ஆர். செய்யது அலி<br>த/பெ. T. ராஜா<br>9G- ராஜீவ் காந்தி நகர்<br>திருநெல்வேலி டவுண் | Rs. 65000 /-<br>T.M.B<br>D.D.No. 157806<br>Dated: 28-03-2022 | Rs. 65000 /-<br>T.M.B<br>D.D.No. 157805<br>Dated: 28-03-2022 | ரூ.4,06,000 /- |
| **2.** | திரு. ஆ.லெட்சுமி காந்தன்<br>1/14B, I.O.B காலனி<br>காந்தி நகர்,<br>திருநெல்வேலி டவுண். | Rs. 65000 /-<br>K.V.B<br>D.D.No. 5775521<br>Dated: 25-03-2022 | Rs. 65000 /-<br>K.V.B<br>D.D.No. 577520<br>Dated: 25-03-2022 | ரூ 4,05,000 /- |
| **3.** | திரு. L. குமார வடிவேல்<br>த/பெ. லெஷ்மணன்<br>278, 3வது மெயின் ரோடு,<br>கோடிஸ்வரன் நகர். | Rs. 65000 /-<br>B.O.B<br>D.D.No. 969914<br>Dated: 28-03-2022 | Rs. 65000 /-<br>B.O.B<br>D.D.No. 969915<br>Dated: 28-03-2022 | ரூ 3,20,000 /- |

ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விபரம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திரு. M.லெட்சுமி காந்தன்<br>1/14B, I.O.B காலனி<br>காந்தி நகர்,<br>திருநெல்வேலி டவுண். | Rs. 65000 /-<br>K.V.B<br>D.D.No. 577518<br>Dated: 25-03-2022 | Rs . 65000 /-<br>K.V.B<br>D.D.No. 577519<br>Dated: 25-03-2022 | ஒப்பந்தப்புள்ளி தொகை குறிப்பிடப்பட வில்லை. |

மேற்படி திருநெல்வேலி டவுண் மீன் சந்தையில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட குறுமத்தொகை ரூ. 2,63,000 /-ஆகும். பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி இரண்டில் திரு. ஆர். செய்யது அலி என்பவரின் ரூ.4,06,000 /- ற்கான ஏலக் கேள்வி உச்ச கேள்வியாகும் ஆகும். இந்த உச்ச கேள்வியானது குறும தொகையினை விட 1,43,000 /- கூடுதலாகவும் கடந்த ஆண்டு ஏலத் தொகையினை விட ரூ.1,55,732 /- கூடுதலாகவும் (2,50,268 - 4,06,000 ) திரு. M.லெட்சுமி காந்தன் என்பவரின் ஏலத் தொகையை விட ரூ.1000 /- கூடுதலாகவும் உள்ளது. ஒப்பந்தப்புள்ளியில் திரு.M.லெட்சுமி காந்தன் ஒப்பந்தத் தொகையை குறிப்பிடப் படவில்லை, எனவே உச்ச ஏலக் கேள்வீ தொகை ரூ.4,06,000 /- ஏற்று திரு. ஆர். செய்யது அலி என்பவருக்கு திருநெல்வேலி டவுண் மீன் சந்தையில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தை ஒப்படைக்கும் நாள் முதல் 31-03-2025 வரையிலான காலத்திற்கு அனுபவிக்கும் உரிமத்தினை வழங்க மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலகக்குறிப்பு:

1. மேலே பொருளில் காணும் விபரப்படி இனம் எண் 1 திருநெல்வேலி டவுண் ஆஸாத் சாலையில் உள்ள மீன் சந்தை முன்பு ஞாயிற்றுக் கிழமை தோறும் கோழி விற்பனை செய்பவர்களிடம் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தை திரு.ஆர். செய்யது அலி என்பவரின் உச்ச ஏலக் கேள்வீ தொகை ரூ. 1,00,100/- ஏற்று அன்னாருக்கு மேற்படி உரிமத்தை ஒப்படைக்கும் நாள் முதல் 31-03-2025 வரையிலான காலத்திற்கு அனுபவிக்கும் உரிமத்தினை வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. இனம் எண் 2 டவுண் மீன் சந்தையில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு திரு. ஆர். செய்யது அலி என்பவரின் உச்ச ஏலக் கேள்வீ தொகை ரூ. 4,06,000 /- ஏற்று அன்னாருக்கு மேற்படி உரிமத்தை ஒப்படைக்கும் நாள் முதல் 31-03-2025 வரையிலான காலத்திற்கு அனுபவிக்கும் உரிமத்தினை வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண் அ1405 2022 (திலி வார்டு)

## தீர்மானம் எண்: 5 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

---

6) திருநெல்வேலி மாநகராட்சி, மைய அலுவலகம் மற்றும் நான்கு மண்டல அலுவலகங்கள், மாண்புமிகு மேயர், ஆணையாளர், ஆகியோர்களின் குடியிருப்புகள், பாளையங்கோட்டை வ.உ.சி. மைதானம், திருநெல்வேலி மண்டலத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சரக்கு வாகன முனையம் (Truck Terminal) ஆகிய இடங்களில் பணிபுரிந்து வரும் முன்னாள் இராணுவத்தினர் பாதுகாப்புக்கழகம் (டெக்ஸ்கோ) மூலம் 21 பாதுகாவலர்களை மாமன்றத் தீர்மானம் எண். 255 நாள் 25.02.2021 மற்றும் தீர்மானம் எண். 15 நாள் 31.05.2021-ன்படி 01.04.2021 முதல் 31.03.2022 வரை பணியில் அமர்த்திக்கொள்ளவும் அதற்குரிய ஊதியம் வழங்கவும் அனுமதி பெறப்பட்டது.

| வ. எண் | பதவியின் பெயர் | பாதுகாவலர்களின் எண்ணிக்கை | மாத ஊதியம் ரூ. |
|---|---|---|---|
| 1. | பாதுகாவலர் | 21 | 19239/- மற்றும் (சேவைக் கட்டணம் 12%, சேவை வரி 18% தனி ) |

மேற்படி 21 டெக்ஸ்கோ பணியாளர்களையும் அவசியம் கருதி 1.4.2022 முதல் 31.3.2023 முடிய மேலும் ஒரு வருட காலத்திற்கு மேற்காணும் பட்டியலில் கண்ட ஊதிய

விவரப்படி தற்காலிகமாக பணியில் ஈடுபடுத்தி கொள்ளவும், அவர்களுக்கான ஊதிய செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு முன்னாள் இராணுவத்தினர் பாதுகாப்பு கழகத்தின் மூலம் பணிபுரிந்து வரும் 21 டெக்ஸ்கோ பணியாளர்களையும் ஒப்பந்த அடிப்படையில் 01.04.2022 முதல் 31.03.2023 முடிய உள்ள ஒரு வருடத்திற்கு மட்டும் தற்காலிகமாக பணியில் ஈடுபடுத்தி கொள்ள அனுமதிக்கவும், அதற்கான ஊதிய செலவுகளுக்கும், அவ்வப்போது அரசால் உயர்த்தப்படும் அகவிலைப்படி ஊதியம் மற்றும் கூடுதல் செலவினங்களுக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்

(சி3 / 8109 / 2018)

## தீர்மானம் எண்: 6 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.

---

7) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் முன்னாள் இராணுவத்தினர் கழகம் மூலம் ஒப்பந்த பணியாளர்கள் நியமிக்கப்பட்டு பேருந்து நிலைய பாதுகாப்புபணி, பேருந்து நிலையம் நுழைவு கட்டணம் வசூல் செய்யும் பணி, பேருந்து நிலையத்தில் வாகன காப்பகத்தில் வசூல் செய்யும் பணி, ஆம்னி பேருந்து நிலையத்தில் வசூல் செய்யும்பணி, மற்றும் சிறுநீர் கழித்தல், புகை பிடித்தல் நிமித்தம் அபராதம் வசூல் செய்யும் பணி ஆகிய பணிகள் மேற்கொண்டு வருகின்றனர். மேற்படி ஒப்பந்த பணியாளர்களில் மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் பணிபுரிந்து வரும் முன்னாள் இராணுவத்தினர் 25 பணியாளர்கள் மற்றும் ஆம்னி பேருந்து நிலையத்தில் 3 பணியாளர்கள் ஆக மொத்தம் 28 பணியாளர்களுக்கு மாமன்ற தீர்மானம் எண் 14, நாள்: 31-05-2021 -இன் படி 01-04-2021 முதல் 31-03-2022 வரை பணியில் அமர்த்திக்கொள்ள மாமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி 28 டெக்ஸ்கோ பணியாளர்கள் கீழக்கண்டவாறு பணிபுரிந்து வருகின்றனர்.

| வ. எண் | பதவியின் பெயர் | பணியாளர்களின் எண்ணிக்கை | மாத ஊதியம் |
|---|---|---|---|
| 1 | தலைமை காவலர் | 1 | 22003/- |
| 2 | பாதுகாவலர் | 18 | 19239/- |
| 3 | பாதுகாவலர் வாகன காப்பகம் | 3 | 19239/- |
| 4 | இளநிலை உதவியாளர் நிலையில் முன்னாள் இராணுவத்தினர் | 3 | 22003/- |
| 5 | பாதுகாவலர் ஆம்னி பேருந்து நிலையம் | 3 | 19239/- |

மேற்படி பேருந்து நிலைய பாதுகாப்பு பணி நுழைவு கட்டணம் வசூல் செய்யும் பணி ஆகியவற்றின் அவசியம் கருதி 01-04-2022 முதல் 31-03-2023 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு முன்னாள் இராணுவத்தினர் கழகம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பாதுகாப்பு பணியாளர்கள் (Security Guard) 24 நபர்களை பணியாற்ற அனுமதித்தும் மாத ஊதியம் ரூ.19239/-, தலைமை காவலர் 1, மற்றும் இளநிலை உதவியாளர் நிலையில் முன்னாள் இராணுவத்தினர் 3 நபர்களை பணியாற்ற அனுமதித்தும். மாத ஊதியம் ரூ.22003/- மற்றும் 12% சேவை கட்டணமும் 18% சேவை வரி (CGST 9% + SGST 9%) எனும் அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு மேற்கண்ட 28 பணியாளர்களுக்கான ஊதிய செலவுகளுக்கும் மாமன்ற அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலக குறிப்பு

பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு முன்னாள் இராணுவத்தினர் பாதுகாப்பு கழகத்தின் மூலம் பணிபுரிந்து வரும் 28 டெக்ஸ்கோ பணியாளர்களையும் ஒப்பந்த அடிப்படையில் 01-04-2022 முதல் 31-03-2023 முடிய உள்ள காலத்திற்கு தொடர்ந்து ஒப்பந்த அடிப்படையில் பணியாற்ற அனுமதிக்கவும், அதற்கான செலவுகளுக்கும், அவ்வப்போது உயர்த்தப்படும் அகவிலைப்படி ஊதியம் மற்றும் கூடுதல் செலவினங்களுக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

(சி1/1903/2003)

**தீர்மானம் எண்: 7 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது.**

---